Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.835/2025

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.இசக்கிமுனீஸ்வரன்** | Occupation | பல்க் ஊழியர் |
| Father's name | **இசக்கிராஜா** | Calling | |
| Village | **கொழிஞ்சிபட்டி** | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026.

12.03.2026

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொழிஞ்சிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜோதிபெட்ரோல் பல்க்கில் காசாளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 23.04.2025 ம் தேதி திருடுபோன பேட்டரி சம்மந்தமாக போலீசார் 30.04.2025 அன்று என்னையும் என்னுடன் வேலை பார்க்கும் மகேந்திரன் என்பவரையும் விசாரித்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார்செய்ததில் நானும் மகேந்திரன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். **பார்வை மகஜர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது–**

நான் தற்போது ஜோதி பெட்ரோல் பல்க்கில் வேலை செய்து வருகிறேன் அதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி எங்கள் பெட்ரோல் பல்க்கிற்கு எதிரே மாஸ்டர் டீக்கடையும் எம்சி

பைனான்ஸ் டிராவல்ஸ்ம், கிஷோர் ஸ்டிக்கர்ஸ்ம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. எங்களது பெட்ரோல் பல்க்கில் தினமும் நிறைய நபர்கள் பெட்ரோல் போடுவதற்கு வருவார்கள் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்த இடத்திற்கு அருகேயுள்ள ஸ்டிக்கர்ஸ் கடை, டீக்கடை, மற்றும் பைனான்ஸ் நிறுவனத்திலிருந்தும் யாரையாவது போலீசார் சாட்சியாக இருக்கும்படி அழைத்தார்களா என்றால் இல்லை. நான் மேற்படி பெட்ரோல் பல்க்கில் வேலை செய்வதால் என்னை சாட்சியாக இருக்கும்படி அழைத்தார்கள் என்றால் சரிதான். எனது முதலாளி கேட்டுக்கொண்டதால்நான் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முன்பு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. மேற்படி கையெழுத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து செய்துள்ளேன் எனறால் சரியல்ல சம்பவயிடத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.835/2025

**Depositions of PW- 4**

| Name | **திரு.கார்த்திக்** | Occupation | பஸ் சர்வீஸ் காசாளர் |
|---|---|---|---|
| Father's name | முருகன் | Calling | |
| Village | வேலாயுதபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026.

12.03.2026

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலாயுதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பஸ் சர்வீசில் காசாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 01.05.2025 அன்று நான் அலுவலகத்தில் இருந்தபோது போலீசார் என்னையும் ராஜசேகர் என்பவரையும் காவல்நிலையம் வரச்சொன்னார்கள். பின்னர் உள்ளூர்பட்டி என்ற ஊருக்கு எங்களை போலீசார் அழைத்து சென்றார்கள். சூர்யபிரகாஷ் என்பவர் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்த சூர்யபிரகாஷை விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து திருடியதை ஒப்புக்கொண்டு எக்சைட் பேட்டரிகளையும் எடுத்து சென்றதற்கு TN 84 H 2250 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை உபயோகித்ததாக சொன்னார். அவற்றை போலீசார் அத்தாட்சியின் மூலம் கைப்பற்றினர். என்னிடம் காட்டப்படும் முனீஸ்வரன் என்ற சூர்யபிரகாஷ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி–1ல் உள்ள முதல் கையெழுத்து

என்னுடையதுதான். **அத்தாட்சி–1ல் உள்ள முதல் கையெழுத்து அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களிலுள்ள TN 84 H 2250 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor Plus இருசக்கர வாகனம் தான் என் முன்பு கைப்பற்றப்பட்டது. மேற்படி இருசக்கர வாகனத்தின் புகைப்படங்கள்–4 எண்ணிக்கை சாபொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி–2 ல் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி–2 அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 1வது எதிரி அதே ஊரில் இருக்கும் 2வது எதிரி சந்தோஷ் என்பவரின் வீட்டிற்கு அழைத்து சென்றார். அவரும் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அவர் வீட்டிலிருந்த எக்சைட் பேட்டரியை எடுத்துக்கொடுத்தார். போலீசார் அதனை அத்தாட்சியில் கைப்பற்றினர். என்னிடம் காட்டப்படும் 2வது எதிரி சந்தோஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி–3ல் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி –3 அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட ஆவணங்களில் ராஜசேகர் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது–</u>**

இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை எனக்கு தெரியாது என்றாலும் அவர்களது முகவரி போன்ற விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி நாங்கள் சென்றதாக கூறப்படும் வீடானது எதிரியின் வீடு என்று போலீசார் சொன்னதன் பேரில்தான் தெரியும் என்றால் சரிதான். நான் வேலை செய்யும் ஜோதி பஸ் சர்வீஸ் நிறுவனமானது திருவில்லிபுத்தூர் ராமகிருஷ்ணாபுரத்தில் உள்ளது. மேற்படி உள்ளூர்பட்டிக்கு நான் வேலை செய்யும் நிறுவனத்திலிருந்து மல்லி வழியாக செல்லவேண்டும் என்றாலும் நான் வேலை செய்யும் நிறுவனத்திலிருந்து 13 கிலோமீட்டர் தொலைவு செல்லவேண்டும் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. உள்ளூர்பட்டியில் எத்தனை வீடுகள் இருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எதிரிகளின் வீடானது எந்த திசையை நோக்கி இருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களானது எதிரிகளின் வீட்டில் எந்த

அறையிலிருந்து கைப்பற்றப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் அவர்கள் வீட்டிற்கு சென்றபோது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் போலீசார் விசாரித்தபோது எதிரிகள் மட்டும் தான் இருந்தார்கள். எதிரிகள் வீட்டின் அருகே இருந்த நபர்கள் யாரையேனும் சாட்சிகளாக இருக்கும்படி போலீசார் அழைத்தார்களா என்றால் இல்லை. நான் மேற்படி ஜோதி பஸ்சர்வீசில் வேலை செய்வதால் என்னை சாட்சியாக இருக்கும்படி அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். உண்மையில் எனது முன்பு எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எதிரிகள் கூறியதை என் முன்னால் தட்டச்சு செய்து அதில் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். மேற்படி இரண்டு ஆவணங்களில் எந்த ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளிடமிருந்து பொருட்களை கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. அத்தாட்சி என்றால் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரி கொடுத்த வாக்குமூலம் ஆகும். மேற்படி உள்ளூர்பட்டிக்கு செல்லுமாறு எனது முதலாளி என்னிடம் கூறினார் என்றால்ச ரியல்ல. போலீசார் அழைத்ததனால் நான் தான் எனது முதலாளியிடம் சொல்லிவிட்டு சென்றேன். என்னை போலீசார் கூப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் மேற்படி ஜோதி பஸ் சர்வீசில் வேலை செய்வதால் தான் என்னை அழைத்துள்ளார்கள் என்றாலும் சரிதான். நான் சங்கரன்கோவிலை சேர்ந்தவர் என்பதால் விருதுநகர் மாவட்டத்தை பற்றி எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணங்களில் காவல்நிலையத்தில்வைத்துதான் கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் அதனால் தான் எதிரியின் வீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்பது பற்றியோ மற்ற விவரங்கள் பற்றியோ எனக்குதெரியாது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.835/2025

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.கருப்பசாமி** | Occupation | தலைமை காவலர் |
| Father's name | **முனியப்பன்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026.

12.03.2026

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் உட்கோட்ட குற்ற பிரிவில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண்.221/2025 பிரிவுகள்.303(2) BNS வழக்கு சம்மந்தமாக துணை கண்காணிப்பாளரின் உத்தரவின்பேரில் சார்பு ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் அவர்களிடம் அறிக்கை செய்தேன். திருவில்லிபுத்தூரிலிருந்து மதுரை செல்லும் வழியிலுள்ள ஜோதி பெட்ரோல் பல்க்கிற்கு நானும் சார்பு ஆய்வாளரும் சென்று அங்கிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்தபோது 23.04.2025 அன்று மாலை 04.41 மணியளவில் இருநபர்கள் Splendor இருசக்கர வாகனத்தில் 2 பேட்டரிகளை எடுத்து செல்வதை பார்த்தோம். அந்த சிசிடிவி பதிவை 16GB HP silver pendrive ல் பதிவிறக்கம் செய்து நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் அவர்களிடம் கொடுத்தேன். மேற்படி pendrive ஐ படிவம் 91 மூலம் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் படிவம் 91ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **முதல் விசாரணை தொடர்ச்சி...**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.